[1979 ஏப்ரல் 20

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; தலைவர் அவர்களே, கீழ் பவானி திட்டம் கோவை, திருச்சி போன்ற மாவட்டங்களுக்குப் பயன்படுகிற திட்டம். கரூர் பகுதி கடைப்பகுதியாக இருப்பதால் அவர்களுக்கு காலாகாலத்தில் தண்ணீர் கிடைக்காமல் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இந்த நிலையைப் போக்க ஆலோசித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. எம். எம். ஏ. ரசாக்; தலைவர் அவர்களே, கேரள ஆற்று தண்ணீர் தமிழ் நாட்டிற்குக் கொண்டு வர பேச்சு வார்த்தை நடப்பது எந்த நிலையில் இருக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தையின் பயனாக நெல்லை மாவட்டம் பயன்பெற வாய்ப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அய்யன்குளம் வாய்க்கால் மராமத்துப் பணிகள்.

* வினா எண் 749.—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பழனி வட்டம் ஆயக்குடி பகுதியில் உள்ள அய்யன்குளம் மற்றும் அதை ஒட்டிய வாய்க்கால் மராமத்து வேலைகளுக்கான தொகை 1978 சனவரியிலேயே சாங்ஷன் செய்யப்பட்டும் இது வரை வேலை ஆரம்பிக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: திட்டத்தின் துவக்க வேலைகள் முடிவடைந்து பின் டெண்டர்கள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்தக்காரர் நியமிக்கப்பட்டபின் வேலைகள் எடுத்துக் கொள்ளப்படும்.